[1972 மார்ச் 22

கோவில்பட்டி—ஒசநூத்து சாலே

* 623 வினு—திரு. எம். முத்தையா : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி—ஒசநூத்து ரோடு இன்னும் பூர்த்தியாகாததின் காரணம் என்ன?

(இ) இது சம்பந்தமாக அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) தீத்தாம்பட்டியில் சாலே அமைப்பதற்காக 1.54 ஏக்கர் நிலத்தை சம்பந்தப்பட்ட பட்டாதார்கள் ஒப்படைக்க இசைவு தரவில்லே.

(இ) நில ஆர்ஜிதச் சட்டத்தின்கீழ் 4(1) அறிவிக்கை 16—8—1971 நாளிட்ட அரசு ஆணை எண் 1765 வழியாகப் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சட்டத்தின் 6-வது பிரிவுக்கான கருத்து திருநெல்வேலி மாவட்ட வருவாய் அதிகாரிகளிடமிருந்து இன்னும் வரவில்லே.

திரு. எம். முத்தையா : தலேவரவர்களே, இந்தச் சாலே ஏறக்குறைய 25 ஆண்டுகாலமாக இருந்து வருகிறது. அந்த நில ஆர்ஜிதம் செய்யவேண்டுமென்று திருநெல்வேலி மாவட்ட வருவாய் அதிகாரி பல அறிக்கை சமர்ப்பித்து இருக்கிறார்கள். அப்படி இருந்தும் நில ஆர்ஜிதம் செய்யவில்லே. உடனடியாக நில ஆர்ஜிதம் செய்து, அந்தச் சாலேயை அமைத்துத் தர இந்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 1.5 ஏக்கர் நிலம் தனிப்பட்டவருக்குச் சொந்தமாக இருக்கிறது. அந்த இடத்தைத் தர அவர் மறுக்கிறார். ஆகவே, 16—8—71 நாளிட்ட அரசு ஆணேயில் நில ஆர்ஜிதம் செய்ய உத்தரவிடப்பட்டிருக்கிறது. ஆனல் நில ஆர்ஜிதம் செய்கிற முறைப்படி செய்தாலும், உடனடியாகப் பணிகளேத் துவக்குவதற்கு இசைவு தாருங்கள் என்று கேட்டதற்குக் கூட அவர்கள் இசைவு தரவில்லே. ஆகவே, சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. பொறியாளர் அவர்கள் மாவட்ட

1972 மார்ச் 22]

வருவாய்த் துறையினருக்கு இது சம்மந்தமாகச் சில குறிப்புகளை இணக்கம் தெரிவிக்கும் வகையில் அனுப்பியிருக்கிறார்கள். அவரிட மிருந்து பதில் எதிர்பார்க்கப்படுகிறது. வந்ததற்குப் பிறகு முறைப் படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

வில்லிவாக்கம் பேரூராட்சி

* *624 வினு—திரு. க. சுப்பு :* மாண்புமிகு கல்வி–உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள வில்லிவாக்கம் பேரூராட்சியை நகராட்சியாக்கக் கோரி வில்லிவாக்கம் பேரூராட்சி மன்றம் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியிருக்கிறதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

Holidays under Shops Accounts Rules

* 626 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the Shops Accounts Rules (i.e.) Chapters II and III of the Tamil Nadu Shops and Establishments Act, 1947, in respect of holiday during Deepavali, Ramzan and Pongal Festival have been suspended; and

(*b*) if so, the details thereof and the reasons therefor ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) ஆம்.

(இ) வழக்கம்போல, தொழிலாளர் நலத்துறை ஆணையாளர், கீழ்க்கண்ட கால அளவுகட்கு, இம் மாநிலத்திலுள்ள எல்லாக்